# தினசரி சந்தை நிலவரம் ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவம்



எஸ்.சி.முருகன், தக்காளி வியாபாரி,
த/பெ சின்னுசாமி படையாச்சி,
கால்நடை மருத்துவமணை அருகில்,
சேஷன் சாவடி அஞ்சல்,
வாழப்பட்டி வட்டம், சேலம் மாவட்டம்.
அலைபேசி: 9443688427

---

என் பெயர் எஸ்.சி.முருகன், தலைவாசல் சந்தையில் உள்ள ஒரு மொத்த வியாபாரி, நான் தக்காளியை பல்வேறு சந்தைகளில் இருந்து வாங்கி அதை தலைவாசல் தினசரி சந்தையில் விற்பேன். நான் சந்தை ஆய்வாளர் திரு.பாலாஜி அவர்கள் மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தினசரி சந்தை நிலவரத்தை பற்றி அறிந்தேன். தலைவாசல் சந்தை தென்னிந்தியாவின் முக்கியமான காய்கறி சந்தை இது இடம்பெற்றிருப்பது எனக்கு பெருமையாக இருக்கிறது. நான் தினசரி சந்தை நிலவரம் பற்றி அறிந்தேன் (DMI) இது சந்தை நிலவங்களை குறுந்தகவல்களாகவும் அளிக்கிறது. ஒரு மொத்த வியாபாரியான எனக்கு இது பெரும் உதவியாக உள்ளது. இது மேலும் விவசாயிகளுக்கும், வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் உதவியாக இருக்கும்.

இது என்னைப் போன்றவர்களுக்கு உதவியாக உள்ளது. வேறு சந்தைகளின் நிலவரங்களை அறிந்து எங்கள் சந்தையில் விலையை நிர்ணயம் செய்ய உதவுகிறது. நான் தக்காளியை குறுந்தகவல்களாக பெற்ற பிறகு, வேறு சந்தைகளிலிருந்து தக்காளியை எடுத்து வந்து தலைவாசல் சந்தையில் லாபத்திற்கு விற்க திட்டமிடுவேன். நான் தினசரி சந்தை நிலவர சேவையின் மூலம் சந்தை தகவல்களை பெற்ற பின்பு ஒட்டன்சத்திரம் போன்ற சநதைகளிலிருந்து தக்காளியை கொள்முதல் செய்வேன்.

இணையதளத்தில் தினசரி சந்தை நிலவர குறுந்தகவல் சேவையின் மூலம் இப்பொழுது தக்காளியை வாங்குவது மற்றும் விற்பது எளிமையாகிறது. நான் மட்டும் இல்லாமல் மற்ற தக்காளி வியாபாரங்களும் லாபகரமான விலையை

நிர்ணயம் செய்யமுடிகிறது. இந்த சேவை விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் மிகவும் உதவியாக உள்ளது.

இந்த சேவை எங்களுக்கு மிகவும் அவசியமாக உள்ளது. இந்த வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒரு சிறந்த பணியினை மேற்கொண்டுள்ளது. எங்களது வியாபாரம் முன்னைக்காட்டிலும் எளிமையாக அமைய தினசரி சந்தை நிலவரத்தை (DMI) அறிமுகப்படுத்திய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மிக்க நன்றி. நான் இந்த சேவை எதிர்காலத்திலும் தொடரும் என எதிர்பார்க்கிறேன். இத்தகைய சேவைக்காக மீண்டும் ஒரு முறை நன்றி.